தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

## 2016 - 2017

## தமிழ்மொழி

## வளர் தமிழ் 11

# விடைகள்

www.tamiledc.com

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. **க் ச் ட் த் ப் ற்** என்ற எழுத்துகள்

அ) மெல்லினம் ஆ) வல்லினம்

இ) உயிரினம் ஈ) இடையினம்

அ) □ ஆ) ■ இ) □ ஈ) □

2. மாதவி கோவலனுக்கு மடல் கொடுத்தனுப்பியது

அ) மாடலனிடம் ஆ) ஐயையிடம் இ) கௌசிகனிடம் ஈ) மாதரியிடம்

அ) □ ஆ) □ இ) ■ ஈ) □

3. உவமைத் தொகைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) மலைத்தோள் ஆ) வெண்சுவர்

இ) வான் நிலா ஈ) இரண்டேகால்

அ) ■ ஆ) □ இ) □ ஈ) □

4. தமிழர் மிகவுயர்ந்த கல்லாகப் போற்றுவது

அ) வைரக்கல்லை ஆ) படிக்கல்லை

இ) சாமிக்கல்லை ஈ) நடுகல்லை

அ) □ ஆ) □ இ) □ ஈ) ■

5. மூவிடங்களில் ஒன்று

அ) படர்க்கை ஆ) எழுவாய் இ) அடைமொழி ஈ) பயனிலை

அ) ■ ஆ) □ இ) □ ஈ) □

6. மாதவி ஊண் உறக்கம் இன்றி வாடிக்கிடந்தாள். இதில் ஊண் உறக்கம் என்பது

அ) அடுக்குத்தொடர் ஆ) இணைமொழி

இ) இரட்டைக்கிளவி ஈ) அடுக்கிடுக்குத்தொடர்

அ) □ ஆ) ■ இ) □ ஈ) □

தமிழர் கல்விமேம்பாட்டுப் பேரவை

7. சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது. என்ற பழமொழி விளக்குவது

அ) போலித் தோற்றம்　　　　ஆ) பட்டறிவின் பயன்

இ) பேராற்றலும் தோற்கும்　　　　ஈ) எதற்கும் எல்லை உண்டு

அ) □　ஆ) ■　இ) □　ஈ) □

8. யாழ் நூலகம் திறந்து வைக்கப்பட்ட ஆண்டு

அ) 1981　　ஆ) 1969　　இ) 1959　　ஈ) 1979

அ) □　ஆ) □　இ) ■　ஈ) □

9. புத்தரின் படுகொலை என்ற கவிதையை எழுதியவர்

அ) ஏ. ஐ. குணதிலக்கா　　　　ஆ) எம். ஏ. நுஃமான்

இ) கே. நரசிம்மன்　　　　ஈ) க .மு . செல்லப்பா

அ) □　ஆ) ■　இ) □　ஈ) □

10. சால, தவ, நனி என்பன

அ) வினைச்சொற்கள்　　　　ஆ) இடைச்சொற்கள்

இ) பெயர்ச்சொற்கள்　　　　ஈ) உரிச்சொற்கள்

அ) □　ஆ) □　இ) □　ஈ) ■

11. "பச்சைக் குழந்தையங்கே பாலுக்கு அழுதிருக்க.... என்ற கவிதையின் தலைப்பு

அ) ஓடிடும் தமிழா　　　　ஆ) மானிடா சொல்

இ) இனியும்　　　　ஈ) ஓங்குபுகழ் கற்கள்

அ) □　ஆ) ■　இ) □　ஈ) □

12. அல்வழித்தொகை ______________ வகைப்படும்.

அ) நான்கு　　ஆ) ஆறு　　இ) ஐந்து　　ஈ) ஏழு

அ) □　ஆ) □　இ) ■　ஈ) □

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

13. உயிர்க் குறில் எழுத்துகள்

அ) அ இ உ ஏ ஓ　　　ஆ) அ இ உ எ ஒ

இ) அ ஆ இ ஈ உ　　　ஈ) ஆ ஈ ஊ ஏ ஓ

அ) ☐　ஆ) ■　இ) ☐　ஈ) ☐

14. **இலை, கால், தண்டு,** என்பன

அ) இடப்பெயர்கள்　　　ஆ) பொருட்பெயர்கள்

இ) சினைப்பெயர்கள்　　　ஈ) காலப்பெயர்கள்

அ) ☐　ஆ) ☐　இ) ■　ஈ) ☐

15. அழகான ஓவியம் வரைந்தான். இச் சொல்லியத்தில் தோன்றாத சொல்லிய உறுப்பு

அ) பயனிலை　ஆ) எழுவாய்　இ) செயப்படுபொருள்　ஈ) அடைமொழி

அ) ☐　ஆ) ■　இ) ☐　ஈ) ☐

16. பண்ணின்ற கூத்துப் பதினொன்றும் மண்ணின்மேல் போக்கியவள்

அ) கண்ணகி　ஆ) மாதவி　இ) மாதரி　ஈ) ஐயை

அ) ☐　ஆ) ■　இ) ☐　ஈ) ☐

17. காய்கதிர்ச் செல்வனே! என்று கதிரவனை அழைத்தவள்

அ) மாதவி　ஆ) பாண்டிமாதேவி　இ) கண்ணகி　ஈ) மணிமேகலை

அ) ☐　ஆ) ☐　இ) ■　ஈ) ☐

18. ________________ விட்டுவிட்டு ஓடாதே என்று பாவலர் அம்பி குறிப்பிடுகின்றார்.

அ) செல்வத்தை　ஆ) வீட்டை　இ) தமிழை　ஈ) உறவை

அ) ☐　ஆ) ☐　இ) ■　ஈ) ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

19. **கண், இல்** என்ற உருபுகள் குறிப்பது

அ) 5 ஆம் வேற்றுமையை　　　ஆ) 6 ஆம் வேற்றுமையை

இ) 7 ஆம் வேற்றுமையை　　　ஈ) 4 ஆம் வேற்றுமையை

அ) □　ஆ) □　இ) ■　ஈ) □

20. மட்பானை என்பதைப் பிரித்தெழுதினால்

அ) மண் + பானை　　　ஆ) மட் + பானை

இ) மற் + பானை　　　ஈ) மட்ப் + பானை

அ) ■　ஆ) □　இ) □　ஈ) □

21. சிலப்பதிகாரத்தில் வரும் நற்றேரான் கூடல் நகர் என்ற பாடல் அடியில் கூடல் நகர் எனக் குறிப்பிடப்படுவது

அ) பூம்புகார்　　ஆ) சேரநாடு　　இ) மதுரை　　ஈ) சோழநாடு

அ) □　ஆ) □　இ) ■　ஈ) □

22. திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும் என்ற வாழ்த்து இடம்பெற்ற நூல்

அ) மணிமேகலை　　　ஆ) வளையாபதி

இ) குண்டலகேசி　　　ஈ) சிலப்பதிகாரம்

அ) □　ஆ) □　இ) □　ஈ) ■

23. மாதவி அரங்கேறிய அகவை

அ) 16　　ஆ) 14　　இ) 12　　ஈ) 11

அ) □　ஆ) □　இ) ■　ஈ) □

24. வட்டநிலா என்பது

அ) பண்புத்தொகை　　　ஆ) வினைத்தொகை

இ) வேற்றுமைத்தொகை　　　ஈ) உவமைத்தொகை

அ) ■　ஆ) □　இ) □　ஈ) □

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

25. தேராது என்ற சொல்லின் பொருள்

அ) கற்காது ஆ) பாடாது இ) ஆராயாது ஈ) நினைக்காது

அ) ☐ ஆ) ☐ இ) ■ ஈ) ☐

26. உரைவீச்சு என்ற உரைநடைப்பா தோற்றம் பெற்றது

அ) 20 ஆம் நூற்றாண்டில் ஆ) 19 ஆம் நூற்றாண்டில்

இ) 18 ஆம் நூற்றாண்டில் ஈ) 21 ஆம் நூற்றாண்டில்

அ) ■ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. **நடந்தான்** என்பதன் இடைநிலை

அ) ந் ஆ) த் இ) ஆன் ஈ) நட

அ) ☐ ஆ) ■ இ) ☐ ஈ) ☐

28. தனது இல்லத்தில் இலவய நூல்நிலையம் ஒன்றைத் தொடக்கியவர்

அ) லோங்அடிகளார் ஆ) க. மு. செல்லப்பா

இ) இரங்கநாதன் ஈ) நரசிம்மன்

அ) ☐ ஆ) ■ இ) ☐ ஈ) ☐

29. தமிழகம் என்ற பெருநிலம் முழுவதும் வணிகம் செய்தவன்

அ) மாநாய்க்கன் ஆ) கோவலன்

இ) மாடலன் ஈ) மாசாத்துவன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ■

30. போரின்போது மக்கள் கையில் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு

____________________ தெரியாது ஓடினர்.

அ) காலைமாலை ஆ) திக்குத்திசை

இ) இரவுபகல் ஈ) இன்பதுன்பம்

அ) ☐ ஆ) ■ இ) ☐ ஈ) ☐

*விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடப்பட்டிருந்தால் ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி.*

புள்ளிகள் 30

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

தமிழ்நாட்டில் மிகப்பழங்காலத்திலே கொண்காண என்ற நாடு புகழ் பெற்றிருந்தது. இது கொங்குநாடு எனவும் அழைக்கப்பட்டது. கொண்காணநாட்டில் இரப்போர்க்கு இல்லையென்று கூறாது ஈயும் வள்ளலாக விளங்கினான் கொண்கானங்கிழான். அக்காலப் புலவர்கள் பலர் அவனைப் புகழ்ந்து பாடிப் பரிசில்கள் பெற்றனர். சேரமன்னனின் மதிப்பைப் பெற்ற மோசிகீரனார் என்னும் புலவர் ஒரு நாள் கொண்கானங்கிழானைக் காணச் சென்றார். வேந்தர்களால் போற்றப்படுகின்ற சிறப்பை உடைய மோசிகீரனாருக்கு அவர் தகுதிக்கு ஏற்றபடி தன்னால் பரிசில்கள் வழங்க முடியாதே என்று கொண்கானங்கிழான் திகைத்து நின்றான். இதை உணர்ந்த புலவர் மோசிகீரனார்; போரில் எறியப்படும் படைக்கலத்திற்குப் புறமுதுகு காட்டாத வீரம் உடையவன் நீ. வெள்ளைத் துகிலை விரித்ததுபோல் மலை உச்சியில் இருந்து விழுகின்ற குளிர்ந்த பல அருவிகளை உடையது உன் நாடு. அலைகள் மோதுகின்ற கடலின் கரையோரத்தில் சென்றாலும் நீர் வேட்கையைத் தணிக்க அந்தக் கடல் நீர் பயன்படாது என்னும் நிலையில் வேட்கையைத் தணிக்கும் சிறிய அளவு நீர் இருக்கும் இடத்தைத் தேடி மக்கள் செல்வர். அதே போல்தான் பெரிய அரசர்களாக இருந்தாலும் அவர்களிடம் வள்ளல்த்தன்மை இல்லையென்றால் எதையும் ஈயமாட்டார்கள். எமைப் போன்றவர்கள் உமைப் போன்ற உண்மையான வள்ளல் தன்மையுடையவர்களைத்தான் நாடிச் செல்வர். அதனால்தான் நான் உன்னிடம் வந்தேன் என்றார். ‘‘திரையொடு முந்நீர்கரை நணிச் செலினும்....’’ என்னும் புறநானூற்றுப் பாடலில் இச்செய்தியைக் காணலாம்.

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

1. இரப்போருக்கு இல்லையென்று கூறாத வள்ளல் யார்?

*இரப்போர்க்கு இல்லையென்று கூறாத வள்ளல் கொண்கானங்கிழான் .*

2. புலவர்கள் எத்தகையவர்களை நாடிச் செலவர் என மோசிகீரனார் கூறுகின்றார்?

*புலவர்கள் வள்ளல் தன்மையுடையவர்களை நாடிச் செல்வர் என மோசிகீரனார் கூறுகின்றார் .*

3. ஏன் கொண்கானங்கிழான் திகைத்து நின்றான்?

*மோசிகீரனாரின் தகுதிக்கு ஏற்றபடி தன்னால் பரிசில்கள் வழங்க முடியாதே என்று கொண்கானங்கிழான் திகைத்து நின்றான் .*

4. பெரிய வேந்தர்களால் போற்றப்பட்ட புலவர் யார்?

*பெரிய வேந்தர்களால் போற்றப்பட்ட புலவர் மோசிகீரனார் .*

5. கொண்காண நாடு வேறு எப்பெயரால் அழைக்கப்பட்டது?

*கொண்கான நாடு கொங்கு நாடு என அழைக்கப்பட்டது .*

*முழுவிடை ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள்.*

புள்ளிகள் 10

தமிழர் கல்விப் பேரவை

3) **பாடநூல் வினா - ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. "தென்னவர் செங்கோல் என்னால் வளைந்ததே கெடுக என் ஆயுள்" எனக் கூறியவர் யார்?

**பாண்டிய மன்னன்**

2. காலத்தின் தேவையில் உணர்வின் உந்துதலால் எழுந்த இலக்கியம் எது?

**புதுக்கவிதை**

3. "நல்லரசு இல்லா நாட்டிலும் கொல்புலி வாழும் காடு நன்று". இவ் வரியிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

**அறத்தின்வழி ஆட்சி செய்யும் நல்ல மன்னர் இல்லாத நாட்டில் வாழ்வதிலும்விடக் கொடிய விலங்கான புலி வாழும் காட்டில் வாழ்வது நன்று.**


4. மானங் கெட்ட மாந்தரைத் திருத்தி வழிக்குக் கொண்டுவரும் செயலை உதயை வீரையன் எவற்றுடன் ஒப்பிடுகின்றார்?

**மாவாரிகளையும் பாலைவனங்களையும் கடக்கும் செயலுடனும் எரிமலைகளை நொருக்கும் செயலுடனும் ஒப்பிடுகின்றார்.**

5. எதற்காகப் புகாரை விட்டு இப்படிப் புறப்பட்டாய் என்று யாரால் யாரிடம் கேட்கப்பட்டது?

***மாடலனால் கோவலனிடம்***

6. தமிழீழ வரைபடைத்தில் காட்டப்பட்டுள்ள இடங்களின் பெயர்களைத் தருக.




அ. பூநகரி

ஆ. ஆனையிறவு

இ. கிளிநொச்சி

ஈ. திருகோணமலை

7. விளையும் பயிரை முளையில் தெரியும். என்ற பழமொழி விளக்குவது யாது?

**குழந்தைப் பருவத்திலேயே ஒருவரது எதிர்காலம் தெரியும்.**

புள்ளிகள் 10

*விடை ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள். ஏழு வினாக்களில் ஏதாவது ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதியிருக்க வேண்டும். ஏழு வினாக்களுக்கும் விடைகள் எழுதியிருந்தால் முதல் ஐந்து வினாக்களுக்கு மட்டுமே புள்ளிகள் இடவேண்டும்.*

**4) பின்வரும் கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**

தன்னிகர் இல்லாத் தமிழ் மொழியே
உன்னை வளர்க்கவும் ஒரு தடையோ

*தலைப்புக்குப் பொருத்தமான கருத்துள்ள கவிதை வரிகளுக்கு ஏற்ப புள்ளிகள் வழங்க வேண்டும்.*

புள்ளிகள் 10



தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

அ. அன்மொழித்தொகை :-

பொற்றொடி ஆடினாள். கருங்குழலி வந்தாள்.

ஆ. வினைத்தொகை :-

கடிநாய், வளர் தமிழ், விளைபயிர்

2. சொற்பொருள் தருக.

| | | | |
|---|---|---|---|
| வஞ்சினம் | பழிவாங்கும் சினம் | பூவனம் | பூஞ்சோலை |
| அரல் | பொடிக்கல் | சீற்றம் | எல்லை கடந்த சினம் |
| ஆயர் | மந்தை மேய்ப்போர், இடையர் | கிறங்கல் | தனை மறத்தல் |

3. வாழ்த்தினர் என்ற வினைச்சொல்லின் திணை, பால், இடம் என்பவற்றைத் தருக.

திணை உயர்திணை

பால் பலர் பால்

இடம் படர்க்கை

4. பின்வருவனவற்றுக்கு ஒவ்வொரு எடுத்துக்காட்டுத் தருக.

பொதுப்பெயரொடு சிறப்புப் பெயர்:- மருத்துவர் எழிலன்
ஆசிரியர் அறிவழகன்.

சிறப்புப்பெயரொடு பொதுப் பெயர்:- தென்னை மரம், நாக பாம்பு

5. பின்வருவன எவ்வகை மரபுத் தொடர்கள்?

சிலு சிலு இரட்டைக்கிளவி

செக்கச் சிவந்த அடுக்கிடுக்குத் தொடர்

பட்டி தொட்டி இணைமொழி

புள்ளிகள் 15

தமிழர் கல்விப் பேரவை

6) **பந்தியை வாசித்து மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

எம்மைச் சுற்றி இருக்கும் இடத்தினைச் சூழல் என்கின்றோம். எம்மைச் சூழ உள்ள வளி, நீர் நிலைகள், நிலம் என்பன மாசுபடுவதைச் சூழல் மாசடைதல் என்கின்றோம். இயற்கை எமக்கு அளித்துள்ள அழகான சூழலை ஆறு அறிவு படைத்த நாங்களே மாசுபடுத்துவதுதான் மிகவும் கவலைக்குரிய ஒன்றாகும். குப்பைகளைக் கண்ட கண்ட இடங்களில் வீசுதல், தொழிலங்களின் கழிவுகளை நீர் நிலைகளில் கலக்கச்செய்தல், பொது இடங்களில் துப்புதல் போன்ற பல தவறான செயல்களை நாங்கள் செய்வதனால் நாமே எமது சூழலை மாசுபடுத்தி நாங்களே எங்களுக்குச் நோய்களை உருவாக்குகின்றோம். "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்ற கணியன் பூங்குன்றனாரின் பாடல் வரிகள் எங்களுக்கு சிறந்த பாடத்தினைப் புகட்டி நிற்கின்றன. எங்களுக்கு ஏற்படுகின்ற துன்பங்களுக்கு நாங்கள் மற்றவர்களைக் கைகாட்டக் கூடாது. நாம் விழிப்புணர்வுடன் இருந்தால் எத்தகைய துன்பத்திலிருந்தும் எம்மால் விடுபட முடியும். எனவே நாம் தூய்மையாக இருப்போம். நலமாக வாழ்வோம்.

**சுருக்கத்திற்கான குறிப்புக்கள்:**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

*உள்ளடக்கம் மாறாது கேட்கப்பட்ட அளவில் அமைந்த பகுதிக்கு புள்ளிகளை வழங்கவும்*

தமிழர் கல்விப் பேரவை

புள்ளிகள் 05



தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

7) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- சிலப்பதிகாரக் கதையினைச் சுருக்கமாக எழுதுக
- இயற்கையால் ஏற்படும் நன்மை தீமைகள்
- தமிழினத்தின் இன்றைய நிலை

புள்ளிகள் 20